# இலங்கைப் பாராளுமன்றம்

## சைகை மொழி உரைபெயர்ப்பாளர் பதவிக்கான வெற்றிடங்கள் - 2026

## (ஒப்பந்த அடிப்படை)

---

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடமாக உள்ள சைகை மொழி உரைபெயர்ப்பாளர் பதவிக்குச் சிறந்த தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2026 ஏப்ரல் 05** ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**குறிப்பு: விண்ணப்பிக்கும் பதவியைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.**

**1. பதவிகளின் எண்ணிக்கை:** 03 (மூன்று)

**2. நியமனத்தின் தன்மை**

இந்த நியமனம் ஒரு (01) வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையிலானது மற்றும் இந்த நியமனம் நிரந்தரமானதல்ல அல்லது ஓய்வூதியத்திற்குரியதுமல்ல.

**3. வேலையின் தன்மை**

செவிப்புலன் குறைபாடுள்ள மற்றும் பகுதியளவு செவிப்புலன் குறைபாடுள்ள நபர்களுக்கு பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் தகவல்கள் கிடைப்பதை எளிதாக்கும் வகையில், பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் குழுக் கூட்டங்களின் உரைபெயர்ப்பு உட்பட, நிகழ்நேர சைகை மொழி உரைபெயர்ப்பு தொடர்பான பணிகளைச் செய்தல் மற்றும் சேவைத் தேவைகளின் அடிப்படையில் ஒதுக்கப்படும் இவற்றுடன் தொடர்பான பணிகளைச் செய்தல்.

**4. சம்பளம்**

மாதாந்தம் ரூ. 68,955.00/- நிலையான கொடுப்பனவாக வழங்கப்படும்.

**5. வயதெல்லை**

25 வயதிற்கு குறையாமலும் – 65 வயதிற்கு உட்பட்டுமிருத்தல்

**6. கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் தகைமைகளும் அனுபவமும்:-**

*கல்வித் தகைமைகள்: -*

ஒரே தடவையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம் மற்றும் ஏனைய இரண்டு பாடங்களில் நான்கு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாகக் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் (பொதுச் சாதாரண பரீட்சை நீங்கலாக).(புதிய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களிலும் (03) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானது)

தொழில்சார் தகைமைகள்:

தேசிய கல்வி நிறுவகத்தினால் (NIE) நடாத்தப்படும் சைகை மொழி உரைபெயர்ப்புக்கான ஓராண்டு டிப்ளோமா சான்றிதழ்

**அல்லது**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் (NISD) நடாத்தப்படும் சைகை மொழி உரைபெயர்ப்புக்கான ஓராண்டு டிப்ளோமா சான்றிதழ்

**அல்லது**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் ஓராண்டு காலத்திற்குக் குறையாத சைகை மொழி உரைபெயர்ப்பு தொடர்பான டிப்ளோமா சான்றிதழ்

சேவை அனுபவம்:

சைகை மொழி உரைபெயர்ப்புத் துறையில் அனுபவம் கொண்டிருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

ஏனைய தகைமைகள்:

- சிறந்த தொடர்பாடல் மற்றும் ஆளுமைத் திறன்கள்.
- உத்தியோகபூர்வ விடயங்களில் இரகசியத்தன்மை மற்றும் தொழில்சார் பண்புகளைப் பேணும் திறன்.

7. **ஆட்சேர்ப்பு நடைமுறை**

பகிரங்க விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, தொழில்சார் (செயன்முறை) பரீட்சை மற்றும் நியமன அதிகாரியினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் தகுதியின் அடிப்படையில் தேர்வு நடைபெறும்.

(அ) தொழில்சார் (செயன்முறை) பரீட்சை:

தகுதிபெறும் விண்ணப்பதாரர்களின் சைகை மொழி உரைபெயர்ப்புத் தொடர்பான செய்முறைத் திறனை மதிப்பீடு செய்ய இப்பரீட்சை நடாத்தப்படும்.

| பாடங்கள் | நேரம் | அதிகபட்ச புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| சைகை மொழியில் நடைமுறை அறிவும் உரைபெயர்ப்பும் | 1 மணித்தியாலம் | 100 | 40 |

(ஆ) நேர்முகப் பரீட்சை:

தொழில்சார் பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரர்கள், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழாமினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சை, பின்வரும் தெரிவடிப்படைகளை வழங்கக்கூடியதாக ஆகக் கூடுதலாக 100 புள்ளிகளுடன் மதிப்பிடும்.

| தொடர் இலக்கம் | மதிப்பீட்டு அளவுகோல்கள் |
|---|---|
| 1 | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள் |

8. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்**

(i) இந்தப் பதவி ஒரு (01) வருட காலப்பகுதிக்கான ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும் நியமனமொன்றாக இருப்பதுடன் இந்த நியமனம் நிரந்தரமானதோ அல்லது ஓய்வூதிய உரித்துடையதோ அல்ல. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியிலுள்ள நிரந்தர ஊழியர்களுக்குரிய ஓய்வூதியம் அல்லது ஏனைய சலுகைகளுக்கு உரித்துடையவர் அல்ல.

(ii) நியமிக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அத்துடன், ஏதேனும் அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதில்லை எனத் தீர்மானிக்கும் அதிகாரமும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு உண்டு.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அறுபது வயதிற்குக் குறைவாயின் அவர் / அவள் தனது சம்பளத்திலலிருந்து அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் பகிரங்க சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் / அவள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்படும்.

9. **விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) இணைத்து அனுப்ப வேண்டும். தேவையேற்படின் மாத்திரம் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:**

(i). பிறப்புச் சான்றிதழ்
(ii). கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்
(iii). தொழில்சார் தகைமைச் சான்றிதழ்கள்
(iv). அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்

**10. பதவியைப் பெற ஏதாவது ஒரு விதத்தில் செல்வாக்கைப் பிரயோகிப்பது தகுதியீனமாகக் கருதப்படும்.**

**11. விண்ணப்பத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பிழையானது எனக் கண்டறியப்பட்டால் அவர் தகுதியற்றவராகக் கருதப்படுவார். நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு அது காரணமாக அமையும்.**

**12. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (மாதிரி விண்ணப்படிவத்தை பாராளுமன்றத்தின் இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்)**

**குஷானி ரோஹணதீர**
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.
2026 மார்ச் மாதம் ...........